**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 20.08.2025**
**OS. No. 145/2016**
**வழக்கு சாட்சி PW.3– கணேசன் , த/பெ.குப்பகவுண்டர்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) நான் விவசாயம் செய்து வருகிறேன். நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வாதியின் வழக்கறிஞர் போன் மூலம் அழைத்ததன் பேரில் வந்துள்ளேன். என் நிரூபண வாக்குமூலத்தில் வாதியின் வழக்கறிஞர் சாட்சியம் அளிக்க அழைத்ததை சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கறிஞர் தட்டச்சு செய்து, தயார் செய்து வைத்த நிரூபண வாக்குமூலத்தில் தான் நான் கையெழுத்து செய்துள்ளேனா என்றால் ஆமாம். என் நிரூபண வாக்குமூலத்திலுள்ள சர்வே எண், தேதி ஆகியவை வாதியின் வழக்கறிஞர் சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் இல்லை, எனக்கே தெரியும். வாதியின் நிலத்திற்கு அருகே உ ள்ளதாக சொல்லும் என்னுடைய நிலத்தின் சர்வே எண், திசை, எந்த கிராமம், எந்த மாவட்டம் என்று என் நிரூபண வாக்குமூலத்தில் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

2) வாதியின் தந்தை பெயர் கண்ணப்பன் ஆகும். வாதியின் உடன்பிறந்தவர்கள் நான்கு நபர்கள், அவர்கள் பெயர் பிரபாகரன், ராஜசேகர், ராஜேஸ்வரி மேலும் ஒருவர் அவர் பெயர் எனக்கு தெரியவில்லை. வாதியின் தந்தை கண்ணப்பன் எந்த வருடம் இறந்துவிட்டார் என்றால் சுமார் 6 வருடத்திற்கு முன்னர் இறந்துவிட்டார். தேதி எனக்கு குறிப்பாக தெரியவில்லை. வாதிக்கு சர்வே எண்.359ல் சொத்து உள்ளது, அதன் உட்பிரிவு எனக்கு தெரியவில்லை. வாதி எந்த சர்வே எண்ணில், எவ்வளவு நிலம், யாரிடம் கிரையம் பெற்றார் என்றால் வாதி தேவன் கிரையம் பெறவில்லை, அவரது தந்தை கண்ணப்பன் தான் ச.எண்.359ல் 5ஏக்கர் கிரையம் பெற்றுள்ளார். வாதி தேவன் ச.எண்.359ல் கண்ட உட்பிரிவில் ஒரு சொத்திற்கு செல்வதற்காக தடவழி கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார், அதன் உட்பிரிவு எனக்கு தெரியவில்லை.

3) வாதி எந்த ஆவணத்தின் அடிப்படையில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் வாதியின் தந்தை வாதிக்கு எழுதி வைத்த ஆவணத்தின் அடிப்படையில் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார். அந்த ஆவணம் எந்த தேதி, எந்த வருடத்தில் எழுதப்பட்டது என்றால் 2000 ல் எழுதப்பட்டது, தேதி, மாதம் எனக்கு தெரியவில்லை. அந்த ஆவணத்தை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால், படித்து பார்த்துள்ளேன். அந்த ஆவணத்தில் என்ன சக்குபந்தி சொல்லப்பட்டுள்ளது என்றால் குள்ளன் நிலத்திற்கு கிழக்கு, ஜானகி நிலத்திற்கு தெற்கு, கமலா நிலத்திற்கு வடக்கு, கோவிந்தன் நிலத்திற்கு மேற்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நான் சொல்லியுள்ளது தவறு என்றும், என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்ணப்பன் விவசாய நிலத்திற்கும் தெற்கு, கோவிந்தன் நிலத்திற்கும் மேற்கு, இதே சர்வே எண்ணில் ரா. சேகர் மீதி நிலத்திற்கு வடக்கு, இதே எண்ணில் கமலா விவசாய நிலத்திற்கு கிழக்கு என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆவணத்தில் அவ்வாறு தான் குறிப்பிடப்பட்டுள்ளது.

4) நான் ஊர் கவுண்டராக உள்ளதால், ஊரில் பஞ்சாயத்து நடத்துவேன் என்றால் சரிதான். ஒரு கிரைய பத்திரத்தில் தடவழி பாத்தியம் இருந்தால், எந்த சர்வே எண்ணிலிருந்து எந்த சர்வே எண்ணிற்கு தடவழி செல்கிறது என்று அதில் குறிப்பிட்டிருப்பார்கள் என்றால் சரிதான். அதில் இந்த சர்வே எண்ணிலிருந்து, இந்த சர்வே எண்ணிற்கு செல்லும் தடவழி பாத்தியமும் கிரையத்திற்கு அடங்கும் என்று அந்த கிரைய ஆவணத்தில் குறிப்பிடுவார்கள் என்றால் சரிதான். தடவழி பாத்தியத்திற்கும் சேர்த்து தான் குறிப்பிட்ட தொகை பெற்றுக்கொண்டு தான் கிரையம் பெறுவார்கள் என்றால் சரிதான், தாவா சொத்திற்கு அவ்வாறு தடவழி இல்லாததால் நாங்கள் சேகர் என்பவரிடம் 12 அடி அகலம், 581 அடி நீளம் கொண்ட பாதையை வாதியின் தந்தை கண்ணப்பனுக்கு வாங்கி கொடுத்தோம். மேற்கண்ட விவரத்தை நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

5) சேகரிடம் எந்த வருடம், எந்த ஆவணத்தின்படி வாங்கி கொடுத்தோம் என்றால் 1997 ல் வாங்கி கொடுத்தோம். தேதி, மாதம் தெரியவில்லை. அந்த ஆவணத்தின் எண்

எனக்கு தெரியுமா என்றால் தெரியவில்லை. அந்த ஆவணத்தில் எத்தனை சென்ட் நிலம் வாங்கப்பட்டது என்றால் 16 சென்ட் வாங்கப்பட்டது. என்னிடம் காட்டப்படும் 09.09.1996 ம் தேதியிட்ட ஆவண எண்.1495/1997 ஆவணம் தான் நான் மேலே சொன்ன ஆவணம் என்றால் ஆமாம். **அந்த ஆவணம் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அந்த ஆவணத்தில் தடவழிக்காக வாங்கப்பட்டதாக எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான், ஆனால், அது தடவழிக்காகத்தான் வாங்கப்பட்டது. தடவழிக்காத்தான் அந்த ஆவணம் வாங்கப்பட்டிருந்தால், தடவழிக்காகத்தான் ஏற்படுத்தப்பட்டதாக அதில் குறிப்பிட்டிருக்கும் என்றும், நான் வாதிக்கு ஆதரவாக ஆவணத்தில் இல்லாததை பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6) வாதி அவரது தந்தையிடமிருந்து கிரையம் பெற்றுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 கிரைய ஆவணமானது வாதிக்கு அவரது தந்தை எழுதி வைத்த கிரைய ஆவணம் என்றால் சரிதான். அந்த கிரைய ஆவணத்திற்கு பிறகு தான் அதில் கண்ட சொத்திற்கு தடவழி வேண்டும் என்று வாதி கேட்கிறாரா என்றால் ஆமாம். மேற்கண்ட கிரையத்திற்கு பின்பு தான் வாதியின் தந்தைக்கு நான் சேகர் என்பவரிடமிருந்து நிலம் வாங்கி கொடுத்தேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் எந்த சர்வே எண்ணிலிருந்து அந்த சொத்திற்கு தடவழி உள்ளது என்று குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான், மாமூல் வழிநடை பாத்தியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மாமூல் வழிநடை பாத்தியம் என்பது அனைத்து ஆவணங்களிலும் பொதுவாக எழுதப்படும் வாக்கியம் என்றால் சரிதான், மொத்த நிலமும் வாதிக்கு தான் என்பதால் மாமூல் வழிநடை பாத்தியம் என்று இந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தின் அடிப்படையில் மொத்த நிலமும் வாதிக்கு என்று நான் சொல்வது தவறு என்றும், 32 சென்ட் நிலம் மட்டும் தான் அந்த ஆவணத்தின் அடிப்படையில் வாதி வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல.

7) வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் வெள்ளப்பன்பட்டியிலிருந்து வடக்காக செல்லும் பொதுவழிப்பாதை என்று குறிப்பாக எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான், அந்த பஞ்சாயத்து பொதுவழிப்பதை கிழ, மேலாகத்தான் செல்கிறது. பி.வா.சா.ஆ.1 கிரைய

ஆவணத்தின் படி அதில் கண்ட சொத்திற்கு வாதியின் தகப்பனார் கண்ணப்பன் தான் உண்மையான உரிமையாளர் என்றால் சரிதான். அதில் கண்ட சொத்து குறித்து அவர் தனது பேர பிள்ளைகளான 1, 2 பிரதிவாதிகளுக்கு செட்டில்மெண்ட் எழுதி வைக்க உரிமை உள்ளது என்றால் உள்ளது, அவர் எழுதி வைத்தாரா என்று எனக்கு தெரியவில்லை அந்த ஆவணத்தில் கண்ட சொத்தின் ச.எண்.359/1F2A என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ஆவணம் தான் கண்ணப்பன் 1, 2 பிரதிவாதிகளுக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணம் என்றால் எனக்கு தெரியவில்லை.

8) வா.சா.ஆ.2 ஆவணத்தில் கண்ணப்பன் என்பவர் தனது பேரன்களான 1, 2 பிரதிவாதிகளுக்கு எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். அந்த ஆவணம் 30.11.2015 ல் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதி இந்த வழக்கை தடவழி பாத்தியம் கேட்டு தாக்கல் செய்துள்ளார், அந்த பரிகாரம் மட்டும் தான் கேட்டுள்ளாரா என்றால் ஆமாம். வா.சா.ஆ.2 ஆவணத்தில் குள்ளன்மாதேவி நிலத்திற்கு கிழக்கு, தேவன் நிலத்திற்கு தெற்கு, பஞ்சாயத்து ரோட்டிற்கு வடக்கு, கமலகண்ணன், சரவண குமாருக்கு பாத்தியப்பட்ட வேறு நிலங்களுக்கு மேற்கு என சக்குபந்தி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், அதில் குள்ளன்மாதேவி நிலத்திற்கு கிழக்கு என்று குறிப்பிட்டுள்ளது தவறு ஆகும்.

9) வாதி இந்த வழக்கில் என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியவில்லை. மேற்கண்ட குள்ளன்மாதேவி நிலத்திற்கு கிழக்கு என்பது தவறு என்று வாதி தன் வழக்கிலும், சாட்சியத்திலும் மறுக்கவில்லை என்றும், நான் தான் தற்போது தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி வாதிக்கு எழுதிக்கொடுத்ததாக சொல்லும் பதிவு செய்யப்படாத பத்திரம் குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியும், என் முன்னிலையில் தான் அது ஏற்படுத்தப்பட்டது. அந்த ஆவணம் எந்த தேதியில் எழுதப்பட்டது என்றால் எனக்கு நினைவில்லை. அந்த தானசெட்டில்மெண்ட் ஆவணம் போர்ஜெரியானது என்று இ.ம.எண்.1/2022 ல் 09.03.2022 ல் இந்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை.

10) அந்த ஆவணம் 24.09.2013 ல் வாங்கி விட்டு, 02.09.2013 ல் எழுதியவாறு உள்ளது என்றும் அதனால் அது மோசடியான ஆவணம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்துள்ளது என்றும், அந்த தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் முதல் 2 பக்கத்தில் கண்ணப்பனின் கையெழுத்து இல்லை என்றும், அதை முழுவதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று மேற்கண்ட இடைநிலை மனுவில் முடிவு கண்டு அந்த மனுவை இந்நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை. நான் சொல்வது போல் 16 சென்ட் நிலத்தில் எப்போதும் தடம் இல்லை என்றும், அதை வாதி எப்போதும் பயன்படுத்தியது இல்லை என்றால் சரியல்ல. மோசடி ஆவணத்தை குறித்து எனக்கு சாட்சி சொல்ல எந்த அருகதையும் இல்லை என்றும், நானும், வாதி மற்றும் மற்றவர்களும் போலியான ஆவணத்தை தயாரித்து 1, 2 பிரதிவாதிகளின் நிலத்தை அபகரிக்க முயற்சி செய்கிறோம் என்றும், நான் வாதிக்காக குறிப்பிடாத தடவழி பாத்தியத்தை ஏற்படுத்தி தர பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

11) வாதிக்கு அவரது வீட்டிற்கும், நிலத்திற்கும் வடக்கே தார் வழி பாதை உள்ளது என்றால் சரியல்ல, தாவா தடவழியை தவிர வேறு வழிஇல்லை. 3 ம் பிரதிவாதி எழுதி கொடுத்த தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின்படி 1,2 பிரதிவாதிகள் தான் உண்மையான உரிமையாளர்கள் என்றும், வாதியும், நானும் 1, 2 பிரதிவாதிகளை மிரட்டி தடவழி வாங்கி கொடுக்க முயற்சி செய்கிறோம் என்றால் சரியல்ல. என் நிரூபண வாக்குமூலத்தில் பத்தி 7 ல் ச.எண்.359/1F2 வை உட்பிரிவு செய்து, 1, 2 பிரதிவாதிகளுக்கு 3 ம் பிரதிவாதி 30.11.2015 ம் தேதியில் எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் ஆவணம் குறித்து எனக்கு தெரியும் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ச.எண்.359/1F2 எப்போது உட்பிரிவு செய்யப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

12) பி.வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் 09.09.1996 ல் 3 ம் பிரதிவாதி கண்ணப்பன் கிரையம் பெற்றபோதே ச.எண்.359/1F2 என்று குறிப்பிட்டுதான் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். 2015 ல் புதியதாக உட்பிரிவு செய்யப்பட்டு தானசெட்டில்மெண்ட் செய்யப்பட்டதாக நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல, ச.எண்.359/1F2 என்ற

நிலத்தை தான் மேலும் உட்பிரிவு செய்துள்ளார்கள், அந்த உட்பிரிவு எண் எனக்கு தெரியவில்லை. அவ்வாறு குறிப்பிட்டு என் நிரூபண வாக்குமூலத்தில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். வாதிக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் எனது சாட்சியம் 1, 2 பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.